BMS



# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண் -15

## சுற்றுச்சூழல்

## அறிவிப்புகள்

## 2011 - 2012

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## மானியக் கோரிக்கை எண் -15

சுற்றுச்சூழல்

**2011 - 2012**

## அறிவிப்புகள்

**தமிழ்நாடு அரசு**
**2011**

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை 2011–2012ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

## சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு

### 1. பிளாஸ்டிக் பொருட்கள் குறித்த விழிப்புணர்வு இயக்கம்

2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்த நிதிநிலை அறிக்கையில் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதற்கு ரூ.5 கோடியும் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி சாலைகள் அமைப்பதற்கு ரூ.50 கோடியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சுற்றுச்சூழல் துறை மூலமாக பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தினால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள் உள்ளிட்ட சூழல் பிரச்சினைகள், பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தடுக்கும் செயல்திட்டம், பிளாஸ்டிக் பொருட்களுக்கான மாற்றுப் பொருட்களை பயன்படுத்துதல் தொடர்பான பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் ரூ.50 இலட்சம் செலவில் 2011–2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

## 2. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாடு குறித்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு இயக்கம்

பிளாஸ்டிக் கழிவுகளின் தீமைகள் பற்றியும் இக்கழிவுகளை தக்க முறையில் மறு சுழற்சி செய்வது குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் தொழில் முனைவோர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பயிற்சி போன்றவை அளிப்பதற்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, **2011–2012** ஆம் ஆண்டில் **ரூ.32** இலட்சம் செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 3. நகராட்சி அலுவலர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை குறித்த பயிற்சி

பெருகிவரும் திடக்கழிவுகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை கண்டறிந்து அவற்றில் புதிய தொழில்நுட்பங்களை கையாளுவது குறித்து நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, **2011–2012**ல் **ரூ.3** இலட்சம் செலவில் பயிற்சியளிக்கப்படும்.



## 4. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய கோயம்புத்தூர் மாவட்ட அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து ஒரு புதிய அலுவலகம் ஏற்படுத்துதல்

கோயம்புத்தூரை தலைமையிடமாக கொண்டு தற்பொழுது ஒரு மாவட்ட அலுவலகம் இயங்கி வருகின்றது. ஒரு மாவட்ட அலுவலகத்துக்கு **1500** எண்ணிக்கை தொழிற்சாலைகள் இருந்தால் மட்டுமே அவற்றை ஒரு மாவட்ட அலுவலகம் கூர்ந்து கண்காணிக்க இயலும். இம்மாவட்டத்தில் **2500**க்கும் அதிகமான அளவில் உள்ள வார்படத் தொழிற்சாலைகள், சாயத் தொழிற்சாலைகள், மின்முலாம் பூச்சு தொழிற்சாலைகள் போன்ற அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை செவ்வனே கண்காணிக்கும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கோயம்புத்தூர் மாவட்ட அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து கோயம்புத்தூர் வடக்கில் ஒரு புதிய மாவட்ட அலுவலகத்தை **ரூ.40** இலட்சம் செலவில் வாரியம் ஏற்படுத்தும்.

## 5. கழிவுநீர் தொட்டிகளை சுத்தம் செய்யும் பொழுது ஏற்படும் உயிரிழப்பினைத் தவிர்க்க தொழிற்சாலைகளுக்கு பயிற்சி அளித்தல்

தொழிற்சாலைகள், கழிவுநீர் சுத்திகரிப்பு தொட்டிகளை சுத்தம் செய்வது வாடிக்கையான ஒன்றாகும். இப்பணியின் பொழுது கவனக்குறைவின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் உயிர் இழப்பு நடந்து வருகின்றது. இதனைத் தவிர்க்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்குபவர்களுக்கு தேவையான பயிற்சி ரூ.25 இலட்சம் செலவில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் உள்ள சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் மூலம் 2011–2012 முதல் பயிற்சி அளிக்கப்படும்.

## 6. புதிய தொழில்நுட்ப செயலாக்க மையம் ஏற்படுத்துதல்

தமிழகத்தில் தொழிற்சாலைகளின் வளர்ச்சி பெருமளவு உயர்ந்துள்ளது. புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புதிய பொருட்களின் உற்பத்தியின் காரணமாக புதிய வகையான கழிவுகள் மற்றும் வாயுக்கள் வெளியேற்றப்



படுகின்றன. இச்சுற்றுச்சூழல் பிரச்சனைகளால் தொழிற்சாலைகள் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் துறைகள் பெரும் சவால்களை நேர்கொள்கின்றன.

எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2011–2012 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் ஒரு புதிய தொழில்நுட்ப செயலாக்க மையத்தை ரூ.5 கோடி செலவில் ஏற்படுத்தி முன்னோடி கல்வி நிலையங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் உதவியுடன் ஆராய்ச்சிகள் மற்றும் செயலாக்க திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## 7. பசுமை விருதுகள் வழங்கல்

சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காக பாடுபடும் தன்னார்வு தொண்டு நிறுவனங்களுக்கு பசுமை விருதுகளை தமிழக அரசின் சுற்றுச்சூழல் துறை வழங்கி வருகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுற்றுச்சூழல் தரத்தை உயர்த்த நடவடிக்கைகள் எடுத்த மாவட்ட ஆட்சியர்களுக்கு பசுமை விருதுகளை 2001 ஆம் ஆண்டு முதல் வழங்கி வந்தது. சென்ற ஐந்து வருடங்களாக இவ்விருது வழங்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இவ்விருதினை மாற்றி அமைத்து இவ்வாண்டிலிருந்து சுற்றுச்சூழலை மேம்படுத்த தொழிற்சாலைகள் எடுத்துள்ள நடவடிக்கைக்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் விருதுகள்

வழங்கப்படும். இதன்படி சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக சிறந்த முறையில் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு பசுமை விருதுகள் வழங்கப்படும். தமிழகத்தை நான்கு மண்டலங்களாக பிரித்து ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு விருது வீதம் நான்கு மண்டலங்களுக்கு 4 விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் ரூ.5 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

## 8. துரித கண்காணிப்பு படையினை ஏற்படுத்துதல்

மணலி, கடலூர், ராணிப்பேட்டை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் உள்ள தொழிற்சாலை வளாகங்களை முனைப்பாக கண்காணிக்கவும், தோல் தொழிற்சாலைகள் மற்றும் சாயத் தொழிற்சாலைகள் உள்ள பகுதிகளை கண்காணிக்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இரண்டு புதிய துரித கண்காணிப்பு படைகளை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணைதலைமை சுற்றுச்சூழல்பொறியாளர் தலைமையில் ஏற்படுத்தும். இக்கண்காணிப்பு படைகள் சென்னை மற்றும் கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் தலைமையில் செயல்படும்.



## 9. சட்டப்பிரிவினை வலுப்படுத்துதல்

மாசுபடுத்துவோர் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு எதிராக தொடுக்கப்படும் வழக்குகள் மற்றும் ரிட் மனுக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இவ்வழக்குகள் மற்றும் ரிட் மனுக்களை எதிர்கொள்ள வாரியமானது வாரியத்தின் வழக்குரைஞரிடம் அல்லது அரசு வழக்குரைஞரை அமர்த்தியோ அல்லது அறிவுரை பெற்றோ வழக்குகளை நடத்தி வருகின்றது. இருப்பினும் சாயத் தொழிற்சாலைகள், தோல் தொழிற்சாலைகளுக்கு எதிரான ரிட் மனுக்கள் மற்றும் பணி மற்றும் நிர்வாகம் குறித்த ரிட் மனுக்கள் மீது துரித மற்றும் தொடர் நடவடிக்கை அவசியமாகின்றது.

எனவே தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சட்டப்பிரிவினை வலுப்படுத்தும் வகையிலும், உயர்நீதி மன்றம், உச்ச நீதிமன்றம் மற்றும் புதிதாக அமைக்கப்படவுள்ள தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்குகளை நடத்த சுற்றுச்சூழல் குறித்த விவரங்கள் அறிந்த ஒரு முதுநிலை சட்ட அலுவலரை நியமிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும்.

## 10. நொய்யல் ஆறு மற்றும் காளிங்கராயன் வாய்க்கால் நீரின் தன்மையினை தொடர்ந்து கண்காணித்தல்

துணி சாயமிடும் தொழிற்சாலைகள் பெரும்பாலும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள நொய்யல் ஆற்றின் கரைகளிலும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள காளிங்கராயன் வாய்க்கால் அருகிலும் அமைந்துள்ளன. இவ்விரு நீர்நிலைகளிலும் மாதந்தோறும் நீர்மாதிரிகள் எடுத்து நீரின் தன்மை கண்காணிக்கப்படுகிறது. இவ்விரு நீர்நிலைகளின் தன்மையினை தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வரும் நிதியாண்டில் மேற்கூறிய நீர்நிலைகள் ஒவ்வொன்றிலும் மூன்று தொடர் கண்காணிப்பு நிலையங்களை மாசு கட்டுப்பாடு வாரியம் ரூ.50 இலட்சம் செலவில் ஏற்படுத்தி நீரில் கரைந்துள்ள உப்பின் தன்மையினைக் கண்காணிக்கும். கண்காணிப்பு கருவிகள், ஆற்றின் மேல்புறம், கீழ்ப்புறம் மற்றும் நடுவில் பொருத்தப்பட்டு, மாசின் அளவு எல்லா நேரங்களிலும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு ஆற்றுநீர் எப்பொழுதும் மாசுபடாமல் கண்காணிக்கப்படும். கண்காணிப்பு கருவிகள் இணையதளம் மூலம் வாரிய அலுவலகம் மற்றும் அந்தந்த மாவட்ட அலுவலகங்களுடன் இணைக்கப்படும்.



## 11. சுற்றுச்சூழல் நுண்துகள்களைக் கண்காணித்தல்

தொழிற்சாலைகளைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் உள்ளாட்சி பகுதிகளில் காற்றில் கலந்திருக்கும் நுண்துகள்களை ( Particulate $Matter_{10}$ and Particulate $Matter_{2.5}$ ) கண்காணிக்கும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வரும் நிதியாண்டில் $PM_{10}$ நுண்துகளினை அளவீடு செய்ய 48 கருவிகளையும், $PM_{2.5}$ நுண்துகளினை அளவீடு செய்ய 16 கருவிகளையும் ரூ 1.28 கோடி செலவில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் 8 மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு வழங்கப்படும்.

## 12. வாரிய அலுவலகத்தில் தொடர் காற்று தர கண்காணிப்பு மையத்தின் செயல்திறன் மேம்படுத்துதல்

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொழிற்சாலைப் பகுதிகளான திருவள்ளூர், அம்பத்தூர், காஞ்சிபுரம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் உள்ள 500க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் தமிழகத்தில் உள்ள மிக அதிக அளவு மாசு ஏற்படுத்தக் கூடிய 17 வகையான 233

தொழிற்சாலைகள் என சுமார் 700க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளை இம்மையத்துடன் இணைத்து அதனை செவ்வனே இயக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஒரு முதன்மை விஞ்ஞான அலுவலர், ஒரு துணை முதன்மை விஞ்ஞான அலுவலர் மற்றும் 6 சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் ஆகிய பணியிடங்கள் வரும் நிதி ஆண்டில் உருவாக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுக்கும்.

## 13. வாரியத்தின் 5 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு தரச் சான்றிதழ் பெறுதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 2011–2012ஆம் நிதியாண்டில் ரூ. 72 இலட்சம் செலவில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், கடலூர், சேலம் ஆகிய 5 இடங்களில் செயல்படும் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களின் தரத்தினை மேம்படுத்த புதுடெல்லியில் உள்ள ஆய்வகங்களின் தேசீய அங்கீகார வாரியத்தின் (NABL-National Accreditation Board for Testing and Calibration Laboratories) மூலமாக ஆய்வகங்களுக்கு தரச் சான்றிதழ் பெற்று ஆய்வகத்தின் பகுப்பாய்வு தரம் மற்றும் கண்காணிப்புத் திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.



## 14. காஞ்சிபுரம் மாவட்டம் மறைமலைநகரில் புதிய மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் ஏற்படுத்துதல்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மறைமலைநகர், ஒரகடம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் போன்ற தொழிற்பேட்டைகளில் தொடர்ந்து வளர்ந்து வரும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் நீர், காற்று, ஒலிமாசு மற்றும் அபாயகரமான கழிவுகளை பகுப்பாய்வு செய்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 2011–2012ஆம் நிதியாண்டில் ரூ.58 இலட்சம் செலவில் ஒரு புதிய மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தினை தொடங்க திட்டமிட்டுள்ளது. மேலும் இந்த மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்திற்கு ஒரு தலைமை விஞ்ஞான அலுவலர், மூன்று சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள், இரண்டு ஆய்வக உதவியாளர், ஒரு பொது உதவியாளர், ஒரு தட்டச்சர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் பணியிடங்களை புதிதாக உருவாக்கவும் வாரியம் திட்டமிட்டுள்ளது.

******